# அரசுக்கு எதிராக அணி திரளுக!

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 25-8-86 திங்கள் (ஆவணி 9 துல்ஹஜ 18) முழக்கம் 202

## 'சிங்கக்குட்டி'யின் பிரசுரம் திருமலையில் விநியோகம்

(திருமலை)

அரசுக்கு எதிராக அணிதிரளுமாறு கோரும் துண்டுப்பிரசுரங்கள் திருகோணமலைப் பகுதியிலுள்ளவர்கள் சிலருக்கு தபால மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பொலிஸாருக்கும், திராவிடப் படைகளுக்கும் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இப்பிரசுரத்தில் சிங்கக்குட்டி என கீழே கையொப்பமிடப்பட்டுள்ளது. 1977-ம் ஆண்டுக்குப் பின்னர் ஐநூறுக்கு மேற்பட்ட படைவீரரும், ஆயிரத்து ஐநூறுக்கு மேற்பட்ட சிங்களவர்களும் இறந்துள்ளனர். இந்த அரசின் அசமந்த போக்கினாலேயே இது நடைபெற்றுள்ளது. இந்த நாட்டைப் பிரிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. இதனை அனுமதித்தால் முழுத் தீவுமே பறிபோய்விடும். எனவே, இதனைத் தடுக்க எல்லோரும் அணிதிரளுங்கள் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ இரண்டு மணித்தியாலங்களுக்குள் அடுத்தடுத்து 31 முறை தாக்குதல்!

★ கோட்டை இராணுவம் பஸ்நிலைய, பஜார் பகுதிக்கு மேற்கொண்ட

# மிருகத்தனமான 'ஷெல்' அடிக்கு

# ஒரு பெண் உட்பட நால்வர் பலி!

## 25 பேருக்கு மேல் படுகாயம்

(எட்வர்ட் லியோன்)

யாழ்ப்பாணம் கோட்டையிலுள்ள ராணுவத்தினர் நேற்று பிற்பகல் சுமார் இரண்டு மணித்தியாலத்துக்குள் அடுத்தடுத்து மொத்தம் 31தடவைகள் யாழ்நகரை நோக்கி மேற்கொண்ட மிருகத்தனமான ஷெல் தாக்குதலினால் ஒரு பெண்மணி உட்பட மொத்தம் நான்கு பேர் நேற்றிரவு வரை மரணமானார்கள். இருபத்தைந்துக்கும் அதிகமானோர் படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

'ஷெல்'லுகள் ஒன்றன் பின் ஒன்றாக நகருக்குள் வீழ்ந்ததையடுத்து கடைகள் மூடப்பட்டன. வாகனங்கள் ஓடத் தொடங்கின. மக்கள் எந்தப் பக்கத்தால் ஓடுவது என்று தெரியாமல் நாலா பக்கமும் சிதறி ஓட, ஷெல்கள் அவர்களைத் தொடர்ந்து தாக்கியதாலேயே இவ்வளவு தொகையானோர் படுகாயமடைய நேர்ந்தது. இவர்களில் இருவர் பெண்களாவர்.

மரணமானவர்கள் யாழ் நகரின் பத்திரிகை விற்பனை நிலைய பணியாளரான றெஜீ பீரிஸ் (பெண்-வயது18), யாழ். ஹட்டன்நாஷனல் வங்கி மனே

— 6ஆம் பக்கம் பார்க்க

## கோட்டைக்குள் இரண்டு இராணுவத்தினர் மரணம்

கோட்டையிலிருந்து நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு போராளிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலினால் இரு இராணுவச் சிப்பாய்கள் மரணமானதாகத் தெரியவந்துள்ளது.

''மோட்டோ ஷெல்'' தாக்குதலினால் இவர்கள் பலியாகினர். இவர்களது சடலங்கள் நேற்றிரவே ஹெலிக்கப்டர் மூலம் எடுத்துச் செல்லப்பட்டன.

மேலும் நான்கு சிப்பாய்கள் படுகாயத்துக்குள்ளானதாகவும், இவர்களும் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்தானால்

## கூட்டணி முக்கியஸ்தர் அரசியலிலிருந்து ஓய்வு?

தமிழர் கூட்டணிக்கும் ஜனாதிபதிக்குமிடையே இடம் பெற்றுவரும் பேச்சுவார்த்தை இவ்வார இறுதிக்குள் முடிவடையுமென்றும், அதனையடுத்து இரு தரப்பினரும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவர் என்றும் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படுமானால், அதனையடுத்து கூட்டணியின் முக்கியஸ்தர் ஒருவர் அரசியலிலிருந்து ஓய்வுபெறக் கூடுமென்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதில் சம்பந்தப்பட்ட ''முக்கியஸ்தர்'' எதிரணியில் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

தளபதி அறிவிப்பு

## கோட்டை முகாம் மூடப்படாது

இராணுவத்தினர் மீதான தீவிரவாதிகளின் தாக்குதல்கள் தொடரும்வரை இராணுவத்தினர் எதிர்தாக்குதலை மேற்கொள்ளுவார்கள்.

— 6 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். நூலகமும் சேதம்!

## நகரம் நேற்றிரவு முழுவதும் இருளில்

நேற்றுப் பிற்பகல் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலினால் பழைய பொது நூலகக் கட்டடத்தில் பாரிய சேதமேற்பட்டுள்ளது. இந்த நூலகத்தின் அருகில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த நூலகக் கட்டடத்திலும் சேதமேற்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இதே வேளை மற்றுமொரு ஷெல் யாழ். மாநகரசபையின் மின்சார நிலையத்தினுள் விழுந்து வெடித்ததினால் அங்கிருந்த ட்ரான்ஸ்போமர் இயந்திரம் ஒன்று சேதமுற்றது. அதனால் நேற்றிரவு யாழ். நகரின் கேந்திர நிலையங்கள் இருளில்மூழ்கியிருந்தன. வைத்திய சாலை, மரக்கறிச் சந்தை, பஸ்நிலையம் உட்பட பல இடங்களும் இருளில் மூழ்கிக் கிடந்தன. இதனால் அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் நேற்றிரவு ஸ்தம்பித்திருந்தன. ஜெனறேற்றர்களின் உதவியுடன் அத்தியாவசிய கருமங்கள் மேற்கொள்

...6ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழி, கோட்டையில் புலிகள் நடத்தியதாக்கு

நாவற்குழியில் நேற்றுக்காலை பதினொரு மணியளவில் ராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியேவந்தபோது விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல் நடத்தினர். இதனால்ராணுவத்தினர் பல இழப்புக்களுடன் முகாமுக்குத் திரும்பினர்.

நேற்று மாலை நாலரை மணி முதல் யாழ் கோட்டை முகாமின் பொலிஸ் விடுதி காவல் நிலையத்திலிருந்து புலிகளின் கோட்டை காவல் அரணை

— 6ஆம் பக்கம் பார்க்க

## காயமுற்றோர் விபரங்கள்

நேற்று பிற்பகல்யாழ்.நகரில் நடந்த ஷெல் தாக்குதலின் போது பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோரின் விபரம்வருமாறு:

ஜே பி. பீரிஸ் (45) பத்திரிகை விற்பனையாளர், எஸ் பரமசிவம் (49) யாழ்ப்பாணம், எஸ். சிறிதரன்(27) நயினாதீவு, எஸ். பாலசுப்பிரமணியம்(32) மொடேர்ன் கிளினிக் ஊழியர், எஸ். சிவசந்திரராசா (30) யாழ்ப்பாணம், நஸீர் குல் தூம் (26) பொம்மைவெளி, ஜீ எச். ரம்ழான் (50) முஸ்லீம் தெரு, ரீ. தயானந்தன் (18) யாழ்ப்

...6ஆம் பக்கம் பார்க்க

## புதிய இணைப்பு அதிகாரி

யாழ் மாவட்ட அகதிகள் புனர்வாழ்வு தொடர்பு அதிகாரியாக யாழ் செயலக உணவு திணைக்கள கணக்காளர் திரு ரீ. இராசநாயகம் புனர்வாழ்வு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ ராணுவம் அறிக்கை

## ராணுவத்தின் வெளிவரும் முயற்சி முறியடிக்கப்பட்டது

நேற்று பிற்பகல் கோட்டை இராணுவ முகாமை நோக்கி தாம் மேற்கொண்ட புதிய ரக எச். ஆர். எல் 60 இன மோட்டார் ஷெல் தாக்குதலினால் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்ததாக தமிழ் ஈழ ராணுவம் விடுத்த அறிக்

— 6ஆம் பக்கம் பார்க்க

## சீருடையினர் செய்யும் கைங்கரியங்களில் ஒன்று

(திருமலை)

கட்டைபறிச்சான் ராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள சில தமிழர்களின் வீடுகளுக்கு செல்லும் சீருடையினர், அவ் வீடுகளை அசுத்த மயமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன

— 6ஆம் பக்கம் பார்க்க

## பாராட்டு

(சரசாலை)

தென்மராட்சிப் பகுதியில் இதுவரை நடந்து வந்த சட்டவிரோத மின்சாரபாவனைகள் தடுத்து நிறுத்தப்பட்டமையை மக்கள் பலரும் பாராட்டியுள்ளனர். மின் ஊழியர்களும் இளைஞர் இயக்கத்தினரும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பலனாகவே சட்டவிரோத மின்பாவனை தடுத்து நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புங்குடுதீவில் சட்டவிரோத மின்தொடர்புகள் துண்டிப்பு

(புங்குடுதீவு)

"சட்டவிரோத மின் பாவனையினால் இங்குள்ள மின் பாவனையாளர்களுக்குப் பாரிய இழப்புக்கள் ஏற்படும். இங்குள்ள சிறு தொழிற்சாலைகள் இயங்கமுடியாத நிலை ஏற்படும். விபத்து மரணங்கள் அதிகரிக்கும். மின் மாற்றியே முற்றாக எரிந்துவிடும். இதனால் புங்குடுதீவு முழுவதுமே இருள்மயமாகிவிடும். எனவே இனி மேலாவது சட்டவிரோத மின் பாவனையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்"

இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் புங்குடுதீவு மின் பாவனையாளர் சங்கப் பிரமுகர் திரு. என். பன்னீர்ச் செல்வம்.

புங்குடுதீவில் கடந்த புதன் கிழமை காலை சட்டவிரோத மின்பாவனைக்குப் பயன்படுத்தப்பட்ட பெருந்தொகையான மின்வயர்கள் கைப்பற்றப்பட்டதுடன், மின்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட வயர்கள் முழுவதும் புங்குடுதீவு சந்தையடி மைதானத்தில் வைத்து பொது மக்கள் முன்னிலையில் தீயிடப்பட்டன. இவ்வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. பன்னீர்ச்செல்வம் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

புங்குடுதீவு மின் பாவனையாளர் சங்கச் செயலாளர் திரு. சோ. சந்திரபாலன் தலைமையில் சென்ற தொண்டர் குழுவினரே சட்டவிரோத மின் பாவனைக்குப் பயன்படுத்தப்பட்ட வயர்களைக் கைப்பற்றி வந்தனர். சட்டவிரோத மின் பாவனையால் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து திரு. சோ. சந்திரபாலன் உட்படப் பலர் இவ் வைபவத்தில் பேசினர். இங்குள்ள விடுதலை இயக்கங்களும் சட்ட விரோத மின் பாவனையைத் தவிர்த்துக் கொள்ளுமாறு புங்குடுதீவு மக்களைக் கோரியுள்ளன.




✻ நாவற்குழி கிழக்கு சண்முகராஜா குணராணி தம்பதியின் மகள் யாகிதா இன்று தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✻ யாழ். கன்னாதிட்டி குணசேகரன் காமினி தம்பதியின் மகன் முகேஷ் இன்று தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✻ கொல்லங்கலட்டி ஞானேஸ்வரி தம்பதியின் மகன் செந்தில் குமாரன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✻ திருநெல்வேலி கிழக்கு துரைராசா தம்பதியின் மகள் பிரதீபா இன்று தனது முதலாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✻ உடுவில் கிருஷ்ணராஜ் இரட்ணராணி தம்பதியின் மகள் தர்மினி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை எதுவித இடையூறுகளுமின்றி நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவுக்கு மேசன், தச்சு, வீதி திருத்தம், விவசாயம் தொழிலாளர் போன்ற பதவிகட்கு உடன் அனுப்பி வைக்கப்படும். செல்ல விரும்புவோர் 6 படம், பாஸ்போட் என்பவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

தீவுப் பகுதி மக்களின் நலன்கருதி எமது கிளை ஸ்தாபனம் ஒன்று "ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்" என்னும் பெயரில் வேலணை, வங்களாவடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தொடர்பு:

**N. BALA**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பஸ் வழி இல;-
764, பலாலி வீதி,
கோண்டாவில்.

ஒமேகா ரவல்ஸ் அன் ரூர்ஸ்
வங்களாவடி சந்தி, வேலணை B/1490


## பிறந்த தின வாழ்த்து

★ விஜிதா ★

வேலணை கிழக்கு 1-ம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வரெத்தினம், கலா தம்பதிகளின் அருந்தவப் புதல்வி விஜிதா தனது ஆறுவது பிறந்தநாளை 25.08.86 இன்று தனதுஇல்லத்தில் வெகு விமர்சையாககொண்டாடுகிறார்.

இவரை வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, தம்பி விஜிதன், தங்கை சுஜிதா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, ஜேர்மன் பெரியமாமா, பெரியத்தை, மச்சான்மார் சுரேஸ், சசி, மச்சாள் நிதா, பிரான்ஸ் சித்தப்பா, சித்தி, மலர் அத்தை, தேவி அத்தை.

பெரியமாமா, சின்னமாமா, ஆசைமாமா, நீதிமாமா, லதா அன்ரி, றசிலா சித்தி, அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், தங்கைமார் ஆகியோர் வேலணை பெருங்குளத்து முத்துமாரி அம்மன் அருள்பெற்று சகல பல்கலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

R/25341

## விடுவிக்க கோரிக்கை

(கரவெட்டி)

துன்னாலை இணக்கசபை உறுப்பினரும், சமூக சேவையாளருமாகிய திரு. எஸ். செந்தூர்ராஜாவை விடுவிக்குமாறு புனித இயக்கங்களிடம் கரவெட்டி பிரஜைகள் குழுவும், துன்னாலை பிரஜைகள் குழுவும் வேண்டியுள்ளது.

திரு. செந்தூர்ராஜா அவர்கள் கடந்த 10 8. 86 இல் யாழ். மாவட்ட சனசமூக நிலையச் சமாசத்தின் செயற் குழு கூட்டத்திற்குச் சென்ற போதே கடத்தப்பட்டுள்ளார்.

குடும்ப நிலைமைபற்றி இவரின் பொது ஸ்தாபனங்களும் துண்டுப் பிரசுரமூலம் வேண்டியுள்ளன.


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மனி ★ சவூதி அரேபியா

கனடா, டென்மார்க், ஜேர்மனி செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labourers) மேசன், தச்சுத் தொழிலாளர் எலெக்றிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**M. முருகையா**
குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

B/1489



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா, லண்டன்

(வாரத்துக்கு இருமுறை)

எமது முகவரி குறுகிய காலத்துக்குள் அழைத்துச் செல்கிறார்,

சவூதி அரேபியா, அபுதாபி ஆகிய நாடுகளுக்கு ஹாபர் கிளினஸ், பிளாஸ்ரிக் கொம்பனி, கோழிப் பண்ணை, ஹோட்டல், ஆஸ்பத்திரி ஆகியவற்றிற்கு குறுகிய காலத்துக்குள் பிரயாண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது. உடன் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், பொண்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

C/o V. அம்பிகைபாகன்
முத்தட்டுமட லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**N. சிவஞானம்**
மகாவித்தியாலய அருகாமை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை,

R/25337



## வரி விளம்பரம்

**SALE**

For Sale in Good Condition 32 Keys Melodica and T. V Games Set going cheap. Contact: 850, Hospital Road, Jaffna.

B/1488

**நல்லூரில் சகாய விற்பனை**

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச் சாலையில் ரூ. 15 ற்கு எமது தயாரிப்புக்களை வாங்குபவர்களுக்கு, அழகிய பொலித்தீன் பாக்கும், மில்க்வைற் செய்தியும், அறிவுநூல்களும், கீரை விதைப் பைக்கற்றும் அன்பளிப்பாகக் கொடுக்கப்படும். மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்துஉயர்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

B/1484

**றேனியோ**

தரமான றேனியோ தட்டெழுத்து அச்சுவேலைகள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்; தயா அச்சகம்,138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

B/1423



## பிரயாண ஒழுங்குகள்

○ கனடா ○ ஈராக்
○ சவூதி அரேபியா
○ டென்மார்க் ○ ஜேர்மனி

(1) கனடா, டென்மார், ஜேர்மனி செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

(2) சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) மேசன், தச்சுத் தொழிலாளர், எலெக்றிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

(3) ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிக விரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொண்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

**இ. தேவராசா,**
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
(ஆஸ்பத்திரி அருகாமை) R/25326



## சவூதி அரேபியாவில் வேலைவாய்ப்பு

LABOURERS 550 S. R. உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். பாஸ்போட் 12 படங்களுடன் நேரில் வரவும்.

சிங்கப்பூரில் வீட்டுப் பணிப் பெண்களாக வேலை புரிய விரும்புவோருக்குப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். வசதியற்றோர் எனக் கருதப்படும் பட்சத்தில் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

### ஜேர்மனி

செல்ல விரும்புவோருக்கு உடன் விசா ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். குடும்பமாகச் செல்ல விரும்புவோர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பாஸ்போட்டும், முற்பணமும் தந்தவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**"துர்க்கா என்ரர்பிறைசஸ்"**
மெயின் வீதி, சுன்னாகம்.
R/25342 [நாகம்ஸ் தியேட்டருக்கு முன்பாக]

# சின்னஞ்சிறு செய்திகள்

## போட்டியும் பரிசளிப்பும்

இருபாலை சைவ பரிபாலன சங்க கொழுமபுக் கிளையினர் சமய குரவர் சமய அறிவுப் போட்டி 7.9.86 ஞாயிறு காலை ஒன்பது மணிக்கு கோப்பாய் தெற்கு – இருபாலை அருள்மிகு கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலையில் பரிசளிப்பு வைபவமும் இடம் பெறும். வடமாநில கல்வி அதிபர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

## உணவு முத்திரை விநியோகம்

பூநகரி உ. அ. அதிபர் பிரிவில சென்றமுறை 6638 பேருக்கு மட்டும உணவு முத்திரை வழங்கப்பட்டது. இப்போது புதிய உணவு முத்திரை பெறுவோர் தொகை 14,313 ஆக உயர்ந்துள்ளது.

பெரும்பாலானவர்கள் கடல் வலயச சட்டத்தால பாதிக்கப் பட்ட கடற்தொழிலாளர்களே ஆவர். 3330 பேருக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் தெரிவித்தார். உணவு முத்திரை பெறத் தகுதி இருந்தும் உணவு முத்திரை கிடைக்காதவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு பூநகரி உ. அ. அதிபர் திரு. எஸ். எஸ். சிவரத்தினம் அவர்கள் பொது மக்களை வேண்டியுள்ளார்.

## காந்திஜி சனசமூக நிலையம்

உரும்பராய் காந்திஜி சனசமூக நிலைய புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவாகினர். தலைவர்: திரு. ப. தியாகராசா, உப-தலைவர்: திரு.த. ஸ்ரீதரன், செயலாளர்: திரு. த. செபரிலைப நாயகம், உப-செயலாளர்: திரு. ப. தர்மராசா, பொருளாளர்: திரு. ச. தயாபரன். எண்மர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

## ஆலயம் புதுப் பொலிவு

(வேலணை)

நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாதிருந்ததும், பழமையும், புதுமையும வாய்ந்த காவலூர், கரம்பன் புனித. செபஸ்தியார் தேவாலயம் பல இலட்சக்கணக்கான ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு அழகுறக காட்சி தருகின்றது.

## உதைபந்தாட்ட போட்டி

(வேலணை)

புங்குடுதீவைச் சேர்ந்த சமூக சேவையாளர் அமரர் ம.சி. நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான ஏழுபேர் கொண்ட நொக்கவுட உதைபந்தாட்டப் போட்டியொன்று இம்மாதம் பதினேழாம், பதினெட்டாம் திகதிகளில் புங்குடுதீவு முற்றவெளி மைதானத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் திரு. கு. பீலிக்ஸ் இப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.

## கொத்தணி அமைப்பு

(புங்குடுதீவு)

வேலணையில் கொத்தணிப் பாடசாலை அமைப்பொன்று அடுத்த மாதம் முதல் இயங்கவுள்ளது. வேலணை கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த 34 பாடசாலைகளில் 11 பாடசாலைகள் இக்கொத்தணி அமைப்பின் கீழ் இயங்கவுள்ளன. வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தை முதன்மைப் பாடசாலையாகக் கொண்டு அமையும் இக்கொத்தணியின் அதிபராகப் பிரஸ்தாப வித்தியாலய அதிபர் திரு. எம். சிவராசரத்தினம் கடமையாற்றுவார்.

## இதற்குத் தடை வேண்டும்

(சுண்டுக்குளி)

''பக்கெற்றில் வரும் ஐஸ் பழம் உடல் நலத்திற்குப் பாதகமானது. இவற்றை விற்பனை செய்வதைக் தடை செய்ய வேண்டும்'' என்று கோரும் தீர்மானம் காங்கேசன்துறை சுகாதார வட்டாரக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாங்கொல்லை இளைஞர் முன்னேற்ற மன்றச் சனசமூக நிலைய மண்டபத்தில், சுகாதார உத்தியோகத்தர் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்குழு நிர்வாகிகளாகத் தெரியப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு: தலைவர் திரு. மு. கனகநாயகம், உப தலைவர் திருமதி க. கலாவதி, செயலாளர் திரு. ச. ம. தவராசா, உப செயலாளர் திரு. செ. முருகதாஸ், பொருளாளர் திரு. சீ. டீ. பத்மநாதன், செயற்குழு உறுப்பினர்கள்: திரு. செ. கணபதிப்பிள்ளை, திரு. சி. பாலகுருநாதன், திருமதி க. மாபாலநாயகி, பி. ஜெயரூபி.

## இருள் மயம்

(கரவெட்டி)

கரவெட்டி திரு இருதயக்கல்லூரி, புனித அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றின் முன்பாக உள்ள மேக்கூரி மின் குமிழ்கள் பல காலமாக வெளிச்சமின்றி உள்ளதால் இப்பகுதி வீதி இருள் மயமாகக் காட்சி அளிக்கின்றது.

## விமர்சனங்கள் பரிசு பெறும்

(வேலணை)

வீடியோ தொலைக் காட்சி மூலம் சாண்பிக்கப்படும் மூன்று தரமான தமிழ் சினிமாப்படங்களின் விமர்சனங்களுக்கு பரிசில்கள் வழங்க காவலூர் இலக்கிய வட்டம் முன் வந்துள்ளது.

தமிழ் சினிமாவின் மூலம் இலக்கியத்தை வளர்க்கும் நோக்குடன் இந்த திட்டத்தை காவலூர் இலக்கிய வட்டம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. தொலைக் காட்சிப் பெட்டி இல்லாதவர்கள் குறிப்பிட்ட தினங்களில் தொலைக்காட்சிப் பெட்டியுள்ளவர்களின் வீடுகளுக்குச் சென்று தமிழ்த்திரைப்படங்களைப் பார்ப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் காவலூர், வேலணை ஆகியபகுதிகளைச் சேர்ந்த விமர்சகர்கள் பங்குபற்றலாம் எனவும் தரமான விமர்சனங்களை உருவாக்கும் நோக்குடனேயே இத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் காவலூர் இலக்கிய வட்ட தலைவரும் பிரபல எழுத்தாளருமாகிய திரு. ஆ. சபாரத்தினம் (அதிபர்) தெரிவிக்கின்றார்.

# மனித இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன

(சுன்னாகம்)

விளையாட்டுப் போட்டியின் முக்கியத்துவத்தை உணர்ந்து நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளாலேயே உண்மையான பயன் உண்டாகிறது வெறும் விளையாட்டுக்காக நடத்தப்படும் நிலை மாறவேண்டும். மனித இனத்தின் பிரச்சனைகள் தீர்க்கப்படுவதற்கும் விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன. தென்னாபிரிக்க இனவெறி அரசின் இனக்குரோத நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளைப் பகிஷ்கரிப்புச் செய்த நாடுகள் அதன்மூலம் சில சாதனைகளைச் செய்துள்ளன.''

இவ்வாறு சுன்னாகம் மயிலணி வடக்கு சனசமூக நிலையத்தின் இருபதாவதாண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிதெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

மயிலணி வடக்கில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேல் கொடியேற்றி ஆரம்பித்து திரு. த. விஜயஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில், சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை போக்கவும், அரிய பண்புகளை வளர்க்கவும் ஒற்றுமை, புரிந்துணர்வுகளை ஏற்படுத்தவும், ஒழுக்கம், பணிவுடமை, அநீதியை எதிர்த்து வாதிடல், தீர்வை ஏற்கத் தயாராகுதல் ஆகிய குணங்கள் இளவயதிலேயே விளையாட்டின் மூலம் பழகிக்கொள்ளவேண்டியனவாகும் என்றார்.

சுன்னாகம் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. ச. கந்தசாமி பேசுகையில் மனித முன்னேற்றத்திற்கு விளையாட்டுப் போட்டி அவசியமானதாகும். அத்துடன் மனிதனை நிறைவுள்ளவனாக்குகின்ற .வெற்றி தோல்வியினைச் சமமாக மதித்து தமிழ்ச் சமுதாயத்திற்கு உதவ முன்வரவேண்டும், என்று கூறினார்.

திரு. சி. குமாரவேல் பேசும்போது, இந்நிலையத்தின் வளர்ச்சியையும், ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் பாராட்டினார். திரு. க. மகாதேவன், திரு. க. பொ. நடனசிகாமணி திரு. வே. கந்தசாமி, திரு. கே. எஸ். கார்த்தி ஆகியோரும் உரையாற்றினர். உதவி அரசாங்க அதிபர் பரிசில்களை வழங்கினார்.

### மட்டுவில் மக்கள்

# அகதிகளுக்கான உதவி அளிப்பதில் தாராளம்

(சாவகச்சேரி)

''இலங்கை மண்ணில் பிறந்த தமிழன், தான் பிறந்த மண்ணில் மட்டும்தான் அகதியாக இருக்கவில்லை. அவன் உலகின் பல நாடுகளிலும் அகதியாகவே வாழ்கிறான். எனவே தினம் நாம் எமது ஒருவேளை உணவையாவது துறந்து அதை இங்குள்ள அகதிகளுக்காகச் சேர்த்துக் கொடுத்து, அவர்களின் பசி தீர்த்து கவலையை மறக்கச் செய்வது எமது உடன் பிறப்புகளுக்கு நாம் செய்யும் கடமையாகும் இதை மட்டுவில் பகுதி மக்கள் உணர்ந்து செய்யும் தர்மத்தைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு அறவழி போராட்டக் குழுத் தலைவர் திரு. வி. எஸ். துரைராஜா, அகதிகளுக்காக நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு வைபவத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

தென் மட்டுவிலூர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இச்சீட்டிழுப்பு வைபவம் நடைபெற்றது.

இளைஞர் குழுத் தலைவர் திரு. எஸ் சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை பிரதம லிகிதர் திரு. எஸ். கேதீஸ்வரன் பரிசில்களை வழங்கினார். அகதிகளின் நிதிக்காக நாடகமும் நடாத்தப்பட்டது.

திரு. துரைராஜா தொடர்ந்து தனது உரையில், ''மட்டுவில் பகுதி பொது மக்கள், கிளிநொச்சி, திருகோணமலைப் பகுதியிலிருந்து அகதிகளாக இங்கு வந்த தமிழர்களை தமது உடன் பிறப்புக்களாகக் கருதி அவர்களுக்கு உதவியளிப்பதில் அயராது உழைக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பமும், குடும்ப தர்மம் செய்கிறது. சுமார் 5000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களையும் திரட்டிக் கொடுத்துள்ளார்கள். இப் பகுதியிலுள்ள பொது ஸ்தாபனங்கள் அகதிகளின் உணவுப் பொருட்களைச் சேகரித்து உதவியமையையிட்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம்'' என்றும் கூறினார்.

# பாடசாலை வளர்ச்சிக்கு உழைக்க பலரும் உறுதி

'இப்பாடசாலை புதுவடிவம் பெற்று திகழ்வதற்கான அறிகுறிகள் தற்பொழுது தென்படுகின்றன. பலர் நூற்றாண்டுகளுக்கு மேல் கல்விச்சேவை செய்யும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உழைக்க முன்வந்துள்ளனர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைக்க பலரும் முன் வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும்.'

ஊரெழு சீ. சீ. தமிழ்க்கலவன் பாடசாலையின் அபிவிருத்திக் கருத்தரங்கில் கலந்துகொண்டுரையாற்றிய கலைவாணி சனசமூக நிலையத்தலைவர் திரு. க.வை. தனேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு இ. குலசிங்கம் தலைமையில இக் கூட்டம் நடைபெற்றது. பாடசாலையின் பகுதிநேர ஆங்கில ஆசிரியரை முழுநேர ஆசிரியராக நியமிக்க வேண்டுமென்ற தீர்மானமுட்பட பல தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. கூட்ட இறுதியில் திரு.இ. பொன்னுத்துரையை செயலாளராகக்கொண்ட இருபது பேரைக் கொண்ட கல்விச் சேவையாளர் சங்கமொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

### யாழ். அரச அதிபர் உறுதி:

# பருத்தித்துறை ஆஸ்பத்திரி தங்குமடம் அமைக்கப்படும்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலைக்குத் தேவையான பெற்றோலை தற்போதைய பெற்றோல் விலைக்கு வாங்குவதற்கு யாழ். அரச அதிபரும், மாவட்டச் செயலாளருமான திரு. வி. எம். பஞ்சலிங்கம் அனுமதி வழங்கியுள்ளார்.

அத்துடன் வைத்தியசாலையில் வெளி நோயாளர் பார்வையாளர் தங்குமடமொன்றையும், வைத்தியசாலை சுற்றுமதிலை அமைப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் டாக்டர் கே. த. லலிதகுமார் தலைமையிலான குழுவொன்று திரு பஞ்சலிங்கத்தை நேரிற் சந்தித்து வைத்தியசாலையில் நிலவும் பெற்றோல் தட்டுப்பாட்டால் நோயாளிகள் பாதிக்கப்பட்டு வருவதையும், வைத்தியசாலையில் வெளிநோயாளர் பார்வையாளர் தங்குமடமொன்றையும் வைத்தியசாலைக்கான சுற்றுமதிலை அமைக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டியதையடுத்தே அரச அதிபர் இவ்வாறு உறுதியளித்துள்ளதாகவும் தெவிக்கப்பட்டுள்ளது.


உ

முருகா

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் - 1986

இன்று 16-ம் திருவிழா



காவடிச் சிந்து

சேனை நடத்தினாய்! தேவர் துயர்தீர்த்தாய்!
வானரசை மீள வழங்கினாய் — ஈனர்கொடுங்
கோலால் தமிழர் குமுறுவது காணாயோ
வேலா தமிழ்த்தெய்வ மே!

— சோ. ப.

B/1449

எந்தை கந்தவேளை பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெபிகுளோப்'

உதய சிந்தனை

எல்லா அதிகாரமும் இருக்கிறது. எதையும் செய்யலாம் என்னும் இறுமாப்பினுல், ஒருவன் மற்றவருக்குத் தீங்கு செய்தால் அவன் வாழமாட்டான். அநீதியைச்செய்து அறம் என்னும் நன்னெறியை அழிக்க முயற்சித்தவன் வீழ்ச்சியே அடைவான்.

—புத்தர்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

இதய ஒலி

25-8-86 திங்கட்கிழமை (அக்ஷய) ஆவணி 9

# சினிமாக் காட்சிகள் நிதர்சனமாகின்றன

யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்'லினுல் கடந்த வாரம் ஏற்பட்ட இரண்டு மரணங்கள், இலங்கை அரசினது இனப்படுகொலையின் மறக்க முடியாத கறைபடிந்த சம்பவங்களாக அமைந்துள்ளன.

''மண வீடு பிண வீடானது; பிள்ளையை வெட்டிக் கறி சமைத்தது'' போன்ற கதைகளை சமயக்கதைகளிலும், சினிமாப் படங்களிலும் நாம் பார்த்ததுண்டு.

ஆனுல் அந்தக் காட்சிகளை இப்போது நிதர்சனமாகவே சந்திக்க வேண்டிய அராஜகமான ஆட்சிக் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றேம்.

ஒவ்வொரு மாதமும் அவசரகாலச் சட்டதை நீடிக்கும் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது, குறிப்பிட்ட ஒரு மாத காலத்துக்குள் எத்தனை கொலை, கொள்ளை, வழிப்பறிகள் இடம்பெற்றன என்று பட்டியல் போட்டுக் காட்டும் அமைச்சர்களுக்கு, ஆயுதப்படைகள் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கும் புள்ளி விபரங்கள் தெரியாதிருப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

கடந்த மாதச் சம்பவங்களை கடந்த வாரம் பாராளுமன்றத்தில் விபரித்த அமைச்சர் வின்சன்ட் பெரேரா, மன்னர், மூதூர் திருமலை, நெடுங்கேணி ஆகிய இடங்களில் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது பற்றி ஒருவரிகூட குறிப்பிடவில்லை.

குறிப்பிட்ட மாவட்டங்களின் சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான அரசாங்க அதிபர்கள் கூடவா, அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவர்களாகி விட்டார்கள்?

அரசாங்கம் தனது உத்தியோகபூர்வ புள்ளி விபரங்களில் தமிழர் படுகொலைகளைச் சேர்த்துக் கொள்ள மாட்டாது என்பது நிச்சயமானதென்பதால், இவ்வாறுன ஒவ்வொரு கொலையும் தவறுது பதிவு செய்ய வேண்டியது தமிழ்ப் பத்திரிகைகளின் தர்மப பணியாகியுள்ளது.

கடந்த வாரம் கொட்டடியிலும், ஐயனர் கோவிலடியிலும் இடம்பெற்ற 'ஷெல்' தாக்குதல்களினுல் இரண்டு திருமண விடுகள், மரண வீடுகளாக மாறவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது.

யாழ்நகரில் பழம்பெரும் பத்திரிகை விற்பனையாளரான திரு. நடராஜா அவர்களின் இரண்டாவது புதல்வனின் திருமணச் சடங்கில் கலந்து கொள்ள, அவரது மூத்த புதல்வன் குடும்பத்துடன் செங்கலடியிலிருந்து வந்திருந்தார்.

அச்சமயம் பார்த்து கோட்டையிலிருந்து வந்த 'ஷெல்', மாப்பிள்ளையின் அண்ணன், மனைவி, அவர்களது ஒருவயதுப் பாலகன் ஆகிய மூவரையும் பதம் பார்த்தது.

இதனுல் அந்தப் பிஞ்சுக் குழந்தை கண்களை மூடிக்கொண்டது. அதன் பெற்றுர் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபபட்டுள்ளனர்.

அண்ணனின் பிள்ளையின் எதிர்பாராத மரணத்தால் தம்பியின் திருமணம் நடைபெற முடியாது போனது மட்டுமன்றி, அந்தப் பச்சிளம் பாலகனின் பிஞ்சு உடலை, திருமண முகூர்த்த நேரத்தில் மாப்பிள்ளையானவரே அழுதழுது மயானத்துக்குச் சுமந்து சென்ற காட்சி கல்நெஞ்சக் காரரைக்கூட 'ஓ'வென்று கதறயழ வைத்தது.

இரண்டாவது சம்பவத்தில், திருமணம் நடந்த இரண்டு மணி நேரத்துக்குள்ளேயே மணவாளக் கோலத்துடன் இருபத்தெட்டு வயது இளைஞன் ஒருவன் இராணுவத்தின் 'ஷெல்'லுக்கு இரையானுன்.

அந்தத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லையென்று கோட்டை வாசிகள் கூறினுலும், மணமகனை ஒரு பயங்கரவாதி என்று 'லங்காபுவத்' வர்ணித்தாலும், இந்தக் கொலையை மறக்க முடியுமா? மன்னிக்க முடியுமா?

கழுத்தில் தாலி ஏந்தி, இருமணி நேரத்திலேயே தனது பூவையும் பொட்டையும் இழந்து நிற்கும் உதயசூரியனின் மனைவியின் நிலைமையை நினைக்கும்போது எம்மை அறியாமலேயே கண்ணீர்த் துளிகளை எமது கரங்கள் தடவுகின்றன.

தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தில் இவையெல்லாம் வெற்றியை நோக்கிச் செல்லும் மைல் கற்கள் என்று சமாதானத்துச்குக் கூறலாம்.

அப்படியானுல் இவைகளைத் தாங்கிச் சுமக்கும் மன வைரத்தை ஆண்டவன் ஒவ்வொருவருக்கும் தரவேண்டும்.

# நல்லூரான் சந்நிதியில் நலம்பெறவே கூடிடுவோம்!

ஆண்டுதோறும் தளராத நம்பிக்கையோடும் தாழாத மனப் பாரத்தோடும் முருகனின் திருவிழாக்காணப் பல்லாயிரம் அடியார்கள்கூடுகின்றஇடமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விளங்குகின்றது. 'நினைந்துருகும் அடியார்கள்' பலராகத் தம் நினைவுகளை வேறு விடயங்களிலே செலுத்த வென்றே வருவோரும் கணிசமாக இருப்பதால், பல சந்தர்ப்பங்களில் 'குளிக்கப்போய் சேறு பூசும்' நிலையும் உண்டாவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றேம். கொடியேற்றத்தன்று நகைத் திருட்டும் நகை இழப்பும் நடந்ததாகப் பத்திரிகைகளில் வந்த செய்தி, எடுத்தோரும், கொடுத்தோரும் உண்மையான தரிசன நோக்கிலிருந்து விலகி விட்டனர் என்பதையே தெளிவாகக் காட்டுகின்றது. இந்நிலை உண்மையில் வருந்தத்தக்கதே. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எமக்கு வழங்கிச் சென்ற அறிவுரைகள் முதலாம் இரண்டாம் சைவ வினுவிடைகளோடு முற்றுப் பெற்று விட்டன போலும்!

இவ்வாண்டு நல்லூர் வீதிகளிலே பல இடங்களில் 'ஆலயத்தில் அடியார்கள் அநுசரிக்க வேண்டுகின்றேம்' என்ற தலையங்கத்தோடு கூடியனவும், பத்து மதியுரைகள் அடங்கியனவுமான சுவரொட்டிகள் நாவலர் பெருமானின் அறிவுரைகளை நவீன காலத்திற்கு ஏற்பச் சுருக்கியும்எளிமையாக்கியும் தந்துள்ளதையாவது எம்மவர் கவனிப்பார்களா? கவனித்திருப்பின்,

'எண்ணி இவை கடைப்பிடித்தால்
எத்தீங்கும் எவர்க்குமில்லை'

என்று உணர்ந்து, இயன்ற அளவு பின்பற்ற முன்வருவர் என்பதற்கு ஐயம் இல்லை. அந்தச் சுவரொட்டிகளில் காணப்படும் வாக்கியங்களுக்குச் சிறுசிறு விளக்கம் அளிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**1. அகத்தோடு புறத் தூய்மை அவசியம் என்று உணர்ந்திடுக:**

'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக'

எனத் தொடங்கும் அப்பர் சுவாமிகளின் தேவாரத்தைச் சைவமக்களாகிய நம்மிற் பலர் அறிந்திருப்போம். எமது உடல்கள் கோயிலின் தூய்மையும் எங்கள் உள்ளங்கள் இறைவனுக்கு அடிமை செய்தற்குத் தகுதியும்வாய்ந்தனவாய்அமையும் பொழுதுதான் பூசையாலும் புனஸ்காரங்களாலும் பயன் உண்டு ஆடம்பர அணிகலன்களாலும் அலங்காரங்களாலும் உடல் தூய்மை ஆகாது. அகங்கார மமகாரங்கள் நிறைந்த உள்ளம் பரிசுத்தம் பெருது. எனவே உடலை எளிமையால் தூய்மையாக்கி, உள்ளத்தை அடக்கத்தால் பாதுகாத்து இறையன்பினுல் பரிசுத்தம் பெறச் செய்வோம்.

**2. ஆண்டவனின் நினைவன்றி அவநினைவைத் திறந்திடுக!**

ஒரு நாளிலே பல மணித்தியாலங்களில் எம்மையும் எமது நல்வாழ்வையுமே நாம் நினைக்கின்றேம். இதில் தவறில்லை. 'வலியது வாழும்' என்பதே வழக்கமாகிவிட்ட உலகத்தில், தத்தம் முன்னேற்றத்தினை மனங் கொள்ளுதலும் செயலாக்குதலும் அவசியமே, ஆனுல், ஆட்டுவிப்பானின் ஆடற்பாவைகளாகிய நாம், அவனுலேயே இந்த அளவிலே



னும் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அவனது சந்நிதியிலாவது,அவநினைவைத் துறந்து அவன் நினைவாகவே இருத்தல் ஆகாதா?

**3. இல்லம்போல் வீதிகளில் எழில், சுத்தம் பேணிடுக.**

உள்ளத்தை எழுச்சிபெறச் செய்வது எழில். நிறைவையும் ஆரோக்கியத்தையும் வழங்குவது சுத்தம். சிலர் வாழும் இல்லங்களிலே இவ்விரண்டையும் கண்ணும் கருத்துமாகப் பேணுகின்றேமே? பலர் கூடும் ஆலய வீதிகளில் இவை மிகமிக அவசியம் என்பதை நாம் ஏன் உணர்வதில்லை. ''இதனை அசுத்தமாக் காதீர், அதனை அசுத்தமாக் காதீர்'' என்று பெரிய எழுத்துக்களிலே அட்டைகள் தூக்கிப் பார்த்தா நாம் அறிய வேண்டும்?

**4. 'ஈசனின் சந்நிதியில் இரைச்சலின்றி வணங்கிடுக.'**

'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது அரிது' சும்மா இருப்பது ஒரு புறம் இருக்கட்டும். சுந்தரமூர்த்தி நாயனுர்போல ஐந்து புலன்களையும் விழிப்புலனில் இருத்தி, மனம், புத்தி, சித்தம், அகங்காரமாகிய நான்கு கரணங்களையும் சித்தத்தில் ஒருமுகப்படுத்தி, சாத்துவிகம், இராஜசம், தாமதம் என்னும் முக்குணங்களிலே சாத்துவிகத்தை மேலெழச் செய்து எம்பெருமானை ஒருமுகமாய் லயித்துவழிபட முடியாவிட்டாலும், அம்முயற்சியிலே தீவிரமாக ஈடுபடும் ஒரு சிலருக்காவது இடையூறு செய்யாது இருப்பதே பெரும் சிவப்பணியல்லவா? இதனை மறந்து இறை சந்நிதியிலே, இரைச்சலிடுவது எத்தகைய கொடுமை!

## அடியவன்

**5. உயர்த்துகின்றகைகளினுல் மறையாது தொழுவிடுக:**

எம்பெருமான், சிவாசாரியரின் பஞ்சாரத்தி ஒளியிலே சுடர்விட்டு அருள்பாலிக்கின்ற வேளையிலே 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்றுங்கு அடியார் அனைவரும் தரிசித்திட வகை செய்யாது, கரங்களைத் தலைகளுக்குத் மேல் உயர்த்தி அஞ்சலி செய்வதால் ஆகும் பயன் யாதோ? எல்லா உயிர்க்கும் தந்தையாகிய இறைவனை வலிய பிள்ளைகள் மட்டும் தரிசித்துக்கொண்டு மெலிய பிள்ளைகள் அவ்வாய்ப்பினைப் பெறவிடாது தடுத்தல் பாவம் அல்லவோ?

**6. ஊர்வம்பு பேசாது ஒருமையுடன் வழிபடுக?**

'ஒருமையுடன் நினது மலரடிகள் நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்' என்பது மேலோர் வாக்கு ஒருமையுடன் இறைவனின் மலரடிகளை நினைக்கச் செல்கின்ற இடத்திலே, உலகத்து வம்புகளையெல்லாம் பேசி எம் உறவுமுறையை நாம் கறைப்படுத்தி விடுகின்றேம்; உள்ளத்தின் உள்ளேயும் கோயிலின் உள்ளேயும் ஒருவன் அனைத்துக்கும் சாட்சியாகவும் நீதிவழங்குவோனுகவும் ஒருசேர அமர்ந்துள்ளான் என்பதையும் மறக்கின்றேம்.

**7. எவ்விடத்தும் மனங் கனிந்து இறை புகழே ஓதிடுக.**

'இரு நிலனுய்த் தீயாகி நீருமாகி இயமானனுய் அட்ட மூர்த்தியாகி' என்று பாடி உருகிய அப்பர் சுவாமிகள் எவ்விடத்திலும் எதிலும் இறைவனையே கண்டு அவன் பெரும்புகழினைப் பாடி மகிழ்ந்தார். 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா, நின் கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா' என்று இழிந்ததிலும் இறை தரிசனம் கண்டான் பாரதி, எம்மால் இறைவனை எல்லா இடத்திலும் எல்லாப் பொருள்களிலும் கண்டு அவன் புகழைப்பேச முடியாது என்பது உண்மையே. ஆனுல் அவன் உறைவிடம் என நாம் நம்பும் ஆலயத்திலும் அதன் சூழலிலுமாவது அவன் புகழைப் பேசுவது அவசியம் அல்லவா?

**8. ஏகும்போது அடியாரை நெருக்கிடுதல் தவிர்த்திடுக.**

நாவலர் பெருமான் ஆலயத்தில் செய்யத்தகாத குற்றக்கள் என்று தமது இரண்டாம் சைவ வினுவிடையில் 'சிவாலய தரிசனவியல்' என்ற பிரிவிலே முப்பத்தாறு குற்றங்களைக் கூறியுள்ளார். இவற்றுள் 'வீதிகளினுள்ளும், கோயிலினுள்ளும் நெருக்கியடித்துச் செல்லுதல், குற்றம் என்று அவர் குறிக்கவில்லை. காரணம் அவர் காலத்தில் இவ்வளவு சன நெரிசல் இல்லாமையே. இன்று வீதிகளினுள்ளும், கோயினுள்ளும் நடக்கும் 'இடிபாடுகளை' அவர் காண நேரின் இதனை மாபெரும் குற்றமாக அவர் குறிக்கத் தவறியிருக்க மாட்டார். கோயிலிலே செய்யத்தகாத இக் குற்றங்களைத் தெரியாது செய்தால் 'அகோர மந்திரத்தை ஆயிரம் உருச்செபிக்கின் குற்றம் நீங்கும் என்றும் 'அறிந்து செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவார்' என்றும் அவர் குறித்துள்ளமையை நினைவூட்டுகிறேன்.

**9. ஐயனது தீர்த்தத்தை அசுத்தப்படுத்தற்க:**

மணிவாசகப் பெருந்தகை சிவபெருமானைத் 'தீர்த்தன்' என அழைக்கின்றுர். தீர்த்தன் என்பதன் பொருள் சம்சார சாகரத்தினின்றும் நீக்கி முத்தியாகிய கரையினைச் சேர்ப்பவன் என்பதாகும். தீர்த்தம் இறைவனது திருவருளினைக் குறிக்கும் புனித மகோற்சவம். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தீர்த்தத்தனறு தீர்த்தக்குளத்திலே சுவாமி தீர்த்தமாடியதும் நடக்கும் கொடுமைகள் கணக்கிலடங்கா, தீர்த்தம் என்பது 'நீராடிக் கும்மாளமிடுதல்' என்ற புதிய கருத்தைப் பெற நாம் இடமளிக்கலாமா?

—5ம் பக்கம் பார்க்க

## சாதனைகள் பல புரிந்த சமாதான நீதிபதி

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரியில் இபம்பராசானுடன் கல்வி கற்பிக்கும் பேறு பெற்றேன்.

எந்த வகுப்பிலும், எந்தப் பாடத்தையும் கற்பிக்கும் பேராற்றல் வாய்ந்த இச்சுந்தர சொருபனின் வரவு கண்டு



உயர் வகுப்பு மாணவர் சித்திரப்பாவைகளாக அடங்கி ஒடுங்கி உத்தம மாணவர்களாகி விடுவர். இவரால் மேனிலையடைந்தவர் பலர். ஆனல், பாலர் வகுப்பினுள் நுழைந்தாலோ, மாணவர்களுடன் துள்ளிக்குதித்து ஆடுவார்-பாடுவார். ஆட்டமும் படிப்பும் ஒரு சேர நடக்கும்.

'மியா-மியா பூனே!
மீனு வீட்டுப் பூனே'

என்ற பாடலை இவர் மீட்ட போது மாணுக்கர்-கண்ணை மூடுவதும், பாய்வதும், கூனுவதும்-இத்தனை வருடங்களாகியும் என் இதயத்தில் குடிகொண்டிருக்கின்றன. ஆகா!

இத்தகைய இவரின் ஆற்றல், இளைப்பாறிய பின்பும், உண்ணு விரதப் போராட்டம் முதலிய அரசியற் கூட்டங்களிலும், எம் இனத்தை வழிநடத்துவதிலும் காண முடிந்தது. என்றும் நீதிக்காக வாதிட்ட சமாதான மலை சரிந்து விட்டது ஆனல் இவர் தலைமை தாங்கி நிருவகித்த சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள், பாலர் பள்ளிகள் நினைவுச் சின்னங்களாக என்றும் மிளிரும், அவர் ஒரு கிரிதீபம்.

பல்லாயிரம் பேர் கொண்ட சபையிலும் இவரை ஒரு முறை கண்டாலே போதும்! இவருடைய தோற்றப் பொலிவும் ஆளுமையும் புன் சிரிப்பும் கண்டோரின் மனத்தில் ஆழப் பதிந்து விடும். அப்படி ஒரு தனியாற்றல்!

சிந்தையில் பரிபூரண நிறைவு கண்ட எம் நண்பரின் ஆன்மா சாந்தியுறுக! நாம் அவர் காட்டிய பாதையில் பணிபுரிவதே எமது தலையாய கடமையாகும் ஓம் சாந்தி! வணக்கம்.

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம்.

---

குப்பிளான், சொக்கர்வளவு, சோதிவிநாயகர் ஆலய அலங்காரஉற்சவம் இன்று (25-8-86) திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

### சோதி விநாயகர்

ஒப்பிலாப் பெருமையொடு அடியார்போற்றி
உவந்துதமிழ் பிசைந்துமனம் குழைந்துநின்று
தப்பிலா தென்றுமுயர் சரியைத்தொண்டும்
சார்ந்துவரு கிரியையொடு யோகம்ஞானம்
ஒப்பிலா வகைசெய்து தேர்ந்துஉந்தன்
திருவருளே துணையாக நின்றேம்என்றும்
குப்பிளான் உறைசோதிக் குன்றேஎங்கள்
குலவிளக்கே விநாயகரே அருளும்ஐயா.

— அன்பன்

---

"ரெசோ" அளிக்கும்

இலவச அம்புலன்ஸ் சேவை

உயிராபத்து, அபாயகரமான சுகயீனம், விபத்து போன்ற நேரங்களில் நோயாளியை வைத்தியசாலையில் விரைவில் சேர்ப்பிக்க உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

மாணவர் தொடர்பகம்,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

B/1456

---

### புனித இயங்கங்களுக்கு பணிவான வேண்டுகோள்

எனது மோட்டார் சயிக்கிளை (ஹொண்டா C 70,- 88 ஸ்ரீ 8101 நீல நிறம்) 11-8-86 அன்று இரவு எனது வீட்டில் இரு இளைஞர்கள் குறிப்பிட்ட இயக்கத்தின் பெயரைச் சொல்லி ஒரு மணித்தியாலத்தில் திருப்பித் தருவதாக எடுத்துச் சென்றனர். ஆனல் இன்றுவரை அவர்கள் திருப்பி ஒப்படைக்கவில்லை. தயை கூர்ந்து எனது மோட்டார் சயிக்கிளை புனித இயக்கங்கள் இதில் தலையிட்டு மீட்டுத் தரும்படி அன்பாக வேண்டுகின்றேன்.

**S. தெட்சணுமூர்த்தி,**
(ஆசிரியர்)
மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி-தெற்கு.

R/25343

---

★ பாகிஸ்தான் அதிபர் சொல்கிருர்

# ஆட்சியைக் கைப்பற்ற பெனுஸிருக்கு அவசரம்

(கராச்சி)

"எதிர்க் கட்சித் தலைவி செல்வி பெனுஸிர் பூட்டோ சட்ட திட்டங்களுக்கு மாறுகச் செயற்படுகின்ருர். அதிகாரத்தைக் கைப்பற்ற அவசரப்படுகின்ருர்" என்று பாகிஸ்தான் ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் வெளிநாட்டுப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

புனித மக்கா யாத்திரையை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய ஜனதிபதி இப்பேட்டியை அளித்தார்.

"பெனுஸிர் அமைதியுடன் இருந்து 1990ம் வருடம் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடலாமே" என்றும் ஜனதிபதி இப்பேட்டியில் குறிப்பிட்டார்.

பெனுஸிர் மீது வழக்குத் தொடரப்படுமா? என வினவப்பட்டபோது, எந்த நாட்டிலும் சரி குற்றமிழைப்பவர் எத்தகைய தரத்தில் இருப்பவராயினும் தண்டிக்கப்படவேண்டியவர்தானே? என்று ஜனதிபதி பதிலளித்தார்.

பெனுஸிர் பூட்டோவும் மற்றும் பல எதிர்க்கட்சித் தலைவர்களும் தற்போது கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

நாட்டை எதிர்நோக்கும்

## மிகப் பெரும் சவாலாக இருப்பது பயங்கரவாதமே

— ராஜீவ்

(லக்னே)

"பாரதத்தை இன்று எதிர் நோக்கும் மிகப் பெரிய சவால் பயங்கரவாதம் தான் என்று பிரதமர் திரு. ராஜீவ்காந்தி உத்தரபிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினர்.

"இதனை ஒற்றுமையுடனும் துணிவுடனும் எதிர்த்துப் போரிட வேண்டும்" என்று அவர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

"பயங்கர வாதத்தை எதிர்க்க மக்கள் இயக்கம் உருவாக்கப்பட வேண்டும்" என்றும் பிரதமர் கோரிக்கைவிடுத்தார்.

---

## 40 பேர் மடிவு

(லண்டன்)

ஆபிரிக்க நாடான கெமரூனில் எரிமலை வெடித்தில் நாற்பது பேர் மடிந்தனர்.

---

## குன்றக்குடி அடிகளாரின் விருப்பம்

(சென்னை)

சுதந்திரப் போராட்ட வீரர் சத்தியமூர்த்தி நினைவாக அவர் பிறந்த ஊரில் அவரது உருவச்சிலை ஒன்றும், நூலகம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் பேசுகையில், அவர் பிறந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் நூறு இடங்களில் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

---

கிரியோன் சங்கம்

## வியாபித்த சேவையை குறிக்கோளாக கொண்டது

(நல்லூர்)

1898ம் ஆண்டில் அமெரிக்காவில் மூன்று தொழிலதிபர்கள் ஒரு ஹோட்டலில சந்தித்து ஜெபித்து ஆரம்பித்த இயக்கமே அகில உலக கிரியோன் சங்கமாகும். வேதாகமத்தின் மூலம் வேதத்தைப் பரப்புவதே இதன் நோக்கமாகும். இச்சங்கம் 140 நாடுகளில் ஒருலட்சம் அங்கத்தவர்களைக் கெண்டதாக இன்று வந்திருக்கின்றது. இலங்கையில் யாழ்பாணத்தை விட ஏனைய பாகங்களில் ஏழு குழுக்கள சேவை செய்து வருகின்றனர்.

இவ்வாறு நல்லூர் பரி.யாக்கோபு தேவாலயத்தில் அகில உலக கிரியோன் வேதாகமச் சங்கதின் ஆதரவில்நடைபெற்ற ஆராதனையில் திரு. ஈ. எஸ். கேட்டிஸ் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

திரு.யே.எம். சபாரத்தினம் அவர்களின் வழி நடத்தலின் கீழ் நடைபெற்ற காலை ஆராதனையில் திரு. கேட்டிஸ் தொடர்ந்து அருளுரை நிகழ்துகையில், இந்த சங்கமானது த்தவனுக்கும் மனிதனுக்கும் சேவை செய்வதையும், இயேசுக்கிறிஸ்துவுக்குச் சாட்சியாக இருப்பதையும், வேதாகமப் புதத்தங்களை வெவ்வேறு இடங்களில் மக்களின் பார்வைக்கு வைப்பதையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டு சேவையாற்றி வருகிறது. வைத்தியசாலைகளில் வைத்தியர்கள், ஏனைய உதவியாளர்கள், நோயாளர்கள் ஆகியோரும், பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும், சிறைச்சாலை ஊழியர்கள், சிறையிலிருக்கும் கைதிகள் ஆகியோருக்கும்' ஹோட்டல்களில் அங்கு வருவோருக்கும், அறைகளில் தங்கியிருப்போரும் வேதாகமத்தை வாசித்து அறிந்து கொள்ள வேதாகமப் புத்தகங்கள்இலவசமாக அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகிறது. இது வரை 600 கோடி வேதாகம புத்தகங்ள் பல்வேறு மொழிகளில் அச்சிடப்பட்டுவழங்கப்பட்டுள்ளன. பல்வேறு இனகத்வர்களும்பல்வேறு மதத்தவர்களும்' பல் வேறு மொழிகளைப் பேசுவோம். இந்த வேதாகமங்களை இலவசமாகப் பெற்று வாசித்து தேவனையும் அவரது மகிமையும் அறிந்து தெரிந்து வருகிருர்கள்" என்ருர்.

---

## உணவுப் பஞ்சம் ஏற்படும் நிலை

(காத்மண்டு)

நேபாளத்தில் அறுவடை வீழ்ச்சியடைந்துள்ளதால் இவ் வருடம் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்படும் நிலை உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

---

நல்லூரான்...

— 4ம் பக்கத் தொடர்ச்சி

10. 'ஒருவர்க்கும் இடையூருய் இருப்பதனைத் தவிர்த்திடுக:

அஹிம்சைக்கு வரைவிலக்கணம் அளித்த மகாத்மா காந்தியடிகள் 'பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை மட்டுமன்றி இன்பம் அளித்தலும் அஹிம்சையாகும்' என்பர் ஆம்! நாம் ஆலயத்திற்கு வரும் அடியார்க்கு இடையூருய் இராதிருப்பதோடு எம் அன்பினுலும் பண்பினுலும் இனிமையும் செய்வோமாக.

---

### முக்கிய அறிவித்தல்

வாடிக்கையாளர்களுக்கும், அபிமானிகட்கும் வர்த்தக பெருமக்கட்கும் V S P. ஸ்பெசல் (லஞ்ஒயில்) நல்லெண்ணை விற்பனையாளர்கள் தரும் விசேஷ அறிவித்தல். சில இடங்களில் எங்கள் அடையாளச் சின்னம் (லேபிள்) போல போலிச் சின்னத்தை உபயோகித்து பொதுமக்களையும் எங்கள் ஸ்தாபனத்தையும் ஏமாற்றி வந்தவர்களை கண்டறிந்து தெளிவு படுத்தினேம்.

அவ்விதம் மோசடி மேலும் தொடராது எமது அடையாளச் சின்னத்தில் திருத்தம் செய்துள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்,
26 A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

R/25332

ஈழமுரசு

## மௌன ஊர்வலத்துக்கு அன்னையர் முன்னணி ஆதரவு

ஆயிரம் மீற்றர் பாதுகாப்புவலய சட்டம் நடைமுறைப் படுத்தப்பட விருப்பதை ஆட்சேபித்து யாழ். மக்கள் நடவடிக்கைக் குழுவினாலும் ஏனைய வெகுஜன தொழிற்சங்க வட்டாரங்களினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலம் புதன்கிழமை நடைபெறும். இந்த ஊர்வலத்தில் அன்னையர்கள் அனை வரையும் பங்குபற்றும்படி அன்னையர் முன்னணியின் சார்பில் அதன்தலைவி திருமதி தேம்பா குணநாயகம் அறிக்கை மூலம் கேட்டுள்ளார். யாழ். புகையிரத நிலையம் முன்பாகவிருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமாகும்.

அரசாங்கத்தின் புதிய உத்தரவு

# வடக்குகிழக்கு மாகாண தபாலகங்களில்

## பகலில்தான் வேலை

(திருமலை)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தபாற் கந்தோர்களில் இனிமேல் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையுமே வேலைகள் நடைபெற வேண்டும் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்த நடைமுறை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் உள்ள தபால் அலுவலகங்களில் இடம்பெற்று வரும் கொள்ளைகளைத் தொடர்ந்தே இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய விதியினால் இத்தபால் நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் மேலதிக வேதனமும் கிடைக்காமல் போகும் என கவலை தெரிவிக்கப்படுகிறது.

## கலாசார சீரழிவு வீடியோ படங்கள் காட்டத் தடை!

இனிமேல் மக்களைகலாச்சார சீரழிவுக்கு உள்ளாக்கும் வீடியோ படங்கள் என தணிக்கை குழுவினால் கணிக்கப்படும் படங்கள் எதுவும் காண்பிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என மினிசினிமா ஒன்றியம் அறிவித்துள்ளது.

நேற்று யாழ். நகரில் நடந்த மினிசினிமா ஒன்றியத்தின் அமைப்புக் கூட்டத்திலேயே இத்தீர்மானம்எடுக்கப்பட்டது. குடாநாட்டின் பல வீடியோ சினிமா உரிமையாளர்களும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

மினிசினிமாக்கள் சுகாதார வசதிகளைக் கொண்டிருப்பதாக சுகாதார அத்தியட்சகர் வழங்கிய கடித மூலமான அனுமதியைப்பெறும் வீடியோ திரையரங்கு உரிமையாளர்கள் இருநூற்றி ஐம்பது ரூபா பணம் கட்டி அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்; உண்மைக்கு மாறான ஆபாசமான விளம்பரங்கள் வெளியிடுவதை தவிர்த்தல்; மத்தியப் படுத்தப்பட்ட அலுவலகத்தினால் வழங்கப்படும் நுழைவுச் சீட்டுக்களையே காட்சிகளுக்கு பயன்படுத்துதல்; பகிரங்க இடத்திலோ, வீடுகளிலோ கட்டணம் அறவிட்டு வீடியோ படம் காட்டுதலை தடை செய்தல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன

இத் தீர்மானங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

## மீன் விலை பொன் விலை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தையில் மீன் பொன் விலைக்கு விற்கப் படுகின்றது. அப்பகுதி ஆலய திருவிழாக்கள் பூர்த்தியானதை அடுத்து மீன் சந்தைக்கு வருவோர் தொகை அதிகரித்துள்ளதாலும் கடலில் சுதந்திரமாக மீன் பிடிக்க முடியாத நிலைமையாலும் மீனைப் பிடிப்பவர்கள் சொன்ன விலைக்கே மீனை வாங்கவேண்டியுள்ளது.

## ஷெல் விழுந்து வீடு சேதம்

கோட்டை ராணுவத்தினர் நேற்று பிரயோகித்த 'ஷெல்' யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் இருக்கும் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன தலைவர் ஆர். ஆர் நல்லையாவின் வீட்டில் விழுந்து வெடித்துச் சிதறியது.

வீட்டில் எவரும் இருந்திருக்காததால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. ஆனால் வீடு பலத்த சேதத்திற்குள்ளானது.

போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணத்தால்

## தென்னிலங்கைக்கு சுருட்டு அனுப்புவது பாதிப்பு; தொழிலாளர் வேலையின்றி கஷ்டம்

(மானிப்பாய்)

யாழ். குடா நாட்டிலுள்ள சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட சுருட்டுத் தொழிலாளர்கள் முற்றாக வேலையிழக்கும் அபாயம் எழுந்துள்ளது.

சுருட்டுப் பெட்டிகளை வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைப்பதிலும், வெளி மாவட்டங்களிலிருந்து புகையிலையைப் பெற்றுக்கொள்வதிலும் எதிர்நோக்கப்படும் லொறிப் போக்குவரத்து பிரச்சினைகளாலும், கிழக்கு மாகாணத்தில் அண்மையிலேற்பட்ட தமிழ் – முஸ்லிம் கலவரங்கள், இராணுவத்தினரின் அட்டகாசங்கள் போன்ற அசம்பாவிதங்களால் பல சுருட்டுக் கடைகள் எரிக்கப்பட்டதாலுமே இந்நிலை ஏற்பட்டது.

முன்பு ஒரு சுருட்டுப் பெட்டிக்கு லொறிக் கூலியாக ரூபா 75/- அறவிடப்பட்டது. ஆனால், தற்போது 300 ரூபாவிற்குமேல்அறவிடப்படுகிறது. அத்துடன் முகாம்களிலுள்ள இராணுவத்தினர் சுருட்டுப் பெட்டிகளைச் சோதனையிடுவதால் சுருட்டுகள் பலதத சேதமடைகின்றன. இதனால் சுருட்டுபெட்டிகளை ஏறறுவதற்கு லொறி உரிமையாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். இச் சிக்கல்களின் விளைவாகப் பல சிறிய சுருட்டுத் தொழிற்சாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன. அதில் வேலை செய்த பல தொழிலாளர்கள் வேலையிழந்ததால் அவர்களின் குடும்பங்கள் பட்டினிவாழ்வை எதிர்நோக்கியுள்ளன.

சில தொழிற்சாலைகளில் கிழமையில் ஓரிருநாட்களுக்கே வேலை கொடுக்கப்படுகிறது. அவ்வாறு சுருட்டப்பட்ட பல லட்சம் சுருட்டுகளும் தொழிற்சாலைகளில் தேங்கிக்கிடந்து முதலாளிகளுக்கு பலத்த நட்டம் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மீனவருக்கு அடுத்தபடியாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் சுருட்டுத் தொழிலாளர்கள் எனபது குறிப்பிடத்தக்கது.

### யாழ். நூலகமும்...

ளப்பட்டன.

ஹற்றன் நாஷனல் வங்கியின் முன்பகுதி, வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதியின் பின்பகுதி ஆகியவற்றிலும் ஷெல்கள் விழுந்தன. வீதியில் பல இடங்களிலும் மின்சார, தொலைபேசிக் கம்பிகள் அறுந்து கிடந்தன.

வெளி நோயாளர் பகுதியில் ஷெல் விழுந்ததையடுத்து வைத்தியசாலையிலிருந்த நோயாளர்களும், ஊழியர்களும் பதட்டமடைந்தனர். வார்ட்டுகளில் தங்கியிருந்த பல நோயாளர்களும் வைத்தியசாலையிலிருந்து அச்சம் காரணமாக வீடுகளுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர். வைத்தியசாலை மீதான ஷெல் தாக்குதலை எதிர்த்து ஊழியர்கள் இன்று சில நடவடிககைகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாக நேற்றிரவு தெரியவந்தது.

### மிருகத்தனமான...

ஜர் சூரியகுமார்(35), கொழும்புத்துறை ஆனந்தன் வடலிவீதியைச் சேர்ந்த முத்துக்குமாரு (50) ஆகியோர் என அடையாளம் காணப்பட்டனர். மற்றொரு இளைஞரும் இதனால் மரணமடைந்தார்.

கொட்டடி, ஆஸ்பத்திரி முன் பகுதி, மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை ஆகிய இடங்களில் ஷெல்கள் வெடித்துச் சிதறின.

சில தினங்களுக்கு முன்னர் புதிதாகத் திறக்கப்பட்ட கடையொன்றின் பின் பகுதியும் சேதமுற்றது.

### நாவற்குழி,...

நோக்கி ராணுவத்தினரால் துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல் தாக்குதலும் நடத்தப் பட்டது.

தற்காப்பு யுத்தத்தில் புலிகளின் போராளி ஒருவர் படுகாயமடைந்தார். நேற்றைய எதிர்த்தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு பல வழிகளிலும் ஆட்டோ ரிக்‌ஷோக்காரர்கள் உதவி செய்தனர்.

### காயமுற்றோர்...

பாணம், சின்னத்துரை சுரேஸ் (16) அரியாலை, கெங்காதரன் சந்திரன் (27) வேலணை, ஆர். இராமலிங்கம் (35) யாழ்ப்பாணம், எஸ். சிவகுமார் (24) யாழ்ப்பாணம்.

ஆண்டியப்பா (50) கொட்டடி, கே. குலவீரசிங்கம் (33) கரவெட்டி, ராமசாமி சிவகுமார் (10) குட்லக்கபே,யாழ்ப்பாணம்,எஸ். அப்பையா(56) மூத்தையன்கட்டு, சிவா மகேந்திரன் (22) நாச்சிமார் கோவிலடி, வதனராஜா (18) நாச்சிமார் கோவிலடி, குல்சார்(20) பொம்மைவெளி, திரேசம்மா (39) ஈச்சமோட்டை.

## மானிப்பாயில் முகமூடிக் கொள்ளையர் பிடிபட்டார்

(மானிப்பாய்)

மானிப்பாய் சோதி வேம்படி ஒழுங்கையில் உள்ள ஒரு வீட்டில் இடம் பெறவிருந்த கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டதுடன், கொள்ளையரில் ஒருவர் அயலவரால் மடக்கிப்பிடிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.

இங்குள்ள மகாலிங்கம் என்பவரது வீட்டிற்குள் துப்பாக்கிகளுடன் புகுந்த நான்கு முகமூடி நபர்கள் வீட்டைச் சோதனையிடுவதாக கூறி அறைகளுக்கு சென்றனர்.

இதேநேரம் வீட்டுக்காரப் பெண் அபயக்குரல் எழுப்பியதால் அயலவர்கள் உதவிக்கு வரவே வீட்டிலுள்ளவர்களை தாக்கிவிட்டு தப்பியோடினர். அயலவர்களும் இக்கொள்ளையர்களை பின் தொடர்ந்து துரத்திச் சென்றபோது ஒருவர் ஓடமுடியாது பிடிபட்டார்.

பிடிபட்டவரிடம் சில ஆயுதங்களும் காணப்பட்டன. மரத்துடன் கட்டிவைக்கப்பட்ட பின் இயக்க இளைஞரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார்.

### கோட்டை முகாம்..

கோட்டை இராணுவ முகாம் எக்காரணம் கொண்டும் மூடப்பட மாட்டாது என கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் சிலருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இந்த விபரங்களைத் தெரிவித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை திருமணவீட்டில் ஷெல் விழுந்து மணமகன் பலியான சம்பவம் பற்றி வெளிநாட்டு நிருபர் ஒருவர் கேட்டபோது இச்சம்பவம் குறித்து கவலையடைகின்றேன். அது துர்ரதிஸ்டவசமானது. தீவிரவாதிகளுக்கெதிரான எதிர்த்தாக்குதலின்போது இத்தகைய சம்பவங்கள் தவிர்க்கமுடியாதவை என அவர் தெரிவித்தார்.

### சீருடையினர் ..

னர்.

இந்த வீடுகளில் அதிகமாக ஆண்கள் இல்லாததினால், வீட்டிலுள்ள பெண்களிடம் தமக்கு தாகமாகஇருப்பதாகவும்வாளியில் தண்ணீர் தருமாறும் சீருடையினர் கேட்கின்றனராம். பின்னர் வீட்டிற்குள் புகுந்து யாவரையும் வெளியேறுமாறு கூறி, சில மணி நேரத்தால் அவர்கள் அங்கிருந்து சென்றுவிடுகிறார்களாம்.

சீருடையினர்சென்றபின்னர் வீட்டினுள் சென்றுபார்த்தால் அங்கே இயற்கை கடன் கழிக்கப்பட்டிருந்ததாம் சீருடையினருக்கு தமது முகாம்களில்சுகாதார வசதிகள் இல்லாததினாலேயே இவ்வாறு செய்கின்றார்கள் என இப்பகுதியில் பேசப்படுகிறது.

## ரதோற்சவம்

பொன்னாலை வரதராஜப் பெருமாள்ஆலய ரதோற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

## அமிர் முறையீடு

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவங்கள் பற்றி கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் இந்திய ஹைகமிஷனர் திரு. டிக்ஸிற், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. ஜெனரல் சேபால ஆட்டிகல ஆகியோரிடம் முறையிட்டார்.

### ராணுவத்தின்...

கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதல்களின்போது தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈடுபட்டதாகவும், சக தோழமை இயக்கங்களின் கடும் தாக்குதல்கள் காரணமாக கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் கோட்டையை விட்டு வெளியே வர எடுத்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாகவும் இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### சவரிமுத்து அன்னம்மா

சில்லாலை திருமதி சவரிமுத்து அன்னம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற சவரிமுத்துவின் அன்புமனைவியும், மரியநாயகம், சில்லாலை வித்தியாலய அதிபர் லொறன்ஸ்,மேரியோசவ்,மரியருணி, வேதநாயகம் சலூதி அரேபியா, ஞானஜெஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், கிளாறம்மா, ஆசிரியை வெலிஸ்ரஸ், திரேசா புஸ்பம், சேவியர், வற்றிமா, விக்ரர்விருன்ஸ், ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 25ம் திகதி மாலை 4 மணியளவில் சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

R/25344

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 25-8-1986 திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437